**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.9/2020** |
| Sessions : | | | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for : | | Prosecution : | **P.W. 2** |
| | | Defence : | **D.W.** |
| | | Court : | **C.W.** |

| **Name :** | செல்வராஜ் | **S/o.(or)W/o. :** | |
|---|---|---|---|
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **24.10.2025**

**5, 10 முதல் 13, 17 எதிரிகள் ஆஜர். 3வது ஆஜரில்லை. மனுதாக்கல் ஏற்பு.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது காவல்துறையில் இருந்து பணிஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 13.12.2014ம் தேதி பெரம்பலூர் மதுவிலக்கு அமலாக்கதுறையில் சிறப்பு உதவிஆய்வாளராக பணியில் இருந்தபோது அன்று 18.00 மணிக்கு ஆய்வாளர் தலைமையில் நானும், SI வாசுகிஅவர்களும், தண்ணீர்பந்தல் அருகே சென்னை திருச்சி தேசியநெடுஞ்சாலையில் வாகனதணிக்கை செய்துகொண்டிருந்தபோது வடக்கிலிருந்து தெற்குநோக்கிவந்த TN 42 Y 3458 அப்பாச்சி என்ற இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்தவரை மடக்கி சந்தேகத்தின் பேரில் தணிக்கை செய்தபோது அவருடைய வாகனத்தில் கட்டப்பையில் Green Magic பிராந்தி என்ற லேபிள் ஒட்டிய 10 பாட்டில்கள் இருந்தது. மீண்டும் அவரை விசாரிக்கும்போது அவருடைய விலாசத்தை முன்னுக்குபின் முரணாக கூறியும், பின்னர் அவருடைய பெயர் வெற்றிவேல் த/பெ. சரவணன் மேற்குமாம்பலம் சென்னை என்று கூறியவரை 19.30 மணிக்கு எதிரி வெற்றிவேலை ஆய்வாளர் கைதுசெய்யவும், மேற்படி பாட்டில்களை மகசரில் கைப்பற்றவும் அதில் 2

பாட்டில்களை பகுப்பாய்வுக்கு எடுத்து வைத்து கைப்பற்றவும் உதவியாக இருந்தோம். மேலும், வெற்றிவேல் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் வாலிகண்டபுரம் ஆர்.எஸ் மகால் அருகில் அஷேத்பாட்ஷா என்பவரிடத்தில் மேலும் ஆட்களை வைத்து போலி மதுபானங்களை தயாரித்ததாக சொன்னதின் பேரில் வாலிகண்டபுரம் கிராமநிர்வாக அலுவலர் பழனிசாமி, மற்றும் அவரின் உதவியாளர் பெரியசாமி, ஆகியோர்களிடம் சாட்சிகளாக இருக்க கேட்டுக்கொண்டு அவர்களுடன் சென்று மேற்கண்ட இடத்தை பார்க்கும்பொழுது போலிமதுபானங்களை தயாரிக்க உதவியாக இருந்த செல்வம், ஆதி, மணி, மாணிக்கம், ரகு, சந்தோஷ், விஸ்வநாதன் மற்றும் இருவரை எதிரி வெற்றிவேல் அடையாளம் காட்ட ஆய்வாளர் கைது செய்ய நாங்கள் உதவியாக இருந்தோம். மேலும், அதுக்கு பயன்படுத்திய வாகனங்கள் 6 ஈச்சர் லாரியும், ஒரு சுமோ,  ஒரு பொலிரோ ஆகிய வாகனங்களையும், அதிலிருந்த திரவம் மற்றும் போலிமதுகேன்களையும் மகசரில் கைப்பற்ற நாங்கள் உதவியாக இருந்தோம். அதில் செல்வம் கொடுத்த ஒப்புதல்வாக்குமூலத்தின் அடிப்படையில் அந்த இடத்தின் தென்மேற்கு மூலையில் உள்ள போலிமதுபானம் தயாரிக்க பயன்படுத்திய கீற்று கொட்டகையையும் அனுமதிபெற்று ஆய்வாளர் சோதனை செய்ய நாங்கள் உதவியாக இருந்தோம். போலிமதுபானம் தயாரிக்க பயன்படுத்திய உபகரணங்கள் லேபிள், HPமோட்டார், மிக்சிங்மிசின், பலூன் மற்றும் அங்கிருந்த இரண்டு இருசக்கர வாகனங்கள், ஒரு டேங்கர் லாரியும் மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்ற உதவியாக இருந்தோம்.  மேலும், எதிரிகள் மற்றும் கைப்பற்றிய தடயங்களுடன் 14.12.2014ம் தேதி காலை 09.00 மணிக்கு நிலையம் கொண்டுவந்து திரேகபரிசோதனை செய்து பாரா வசம் ஒப்படைத்தும், ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ய நானும், SI வாசுகி அவர்களும் உதவியாக இருந்தோம். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

ஆய்வாளர் என்னை விசாரித்தபோது தண்ணீர்பந்தலில் எந்த இடத்தில் வைத்து வாகன தணிக்கை செய்தோம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால்

சரிதான். ஆய்வாளர் என்னை விசாரித்தபோது என்னுடைய பாக்கெட்டைரியை அவரிடம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்தவழக்கின் புகார்தாரர் மற்றும் முதல் புலன்விசாரணை அதிகாரி என்னுடைய மேலதிகாரி என்றால் சரிதான். புள்ளிவிவர கணக்கிற்காக அவர் பதிவு செய்த வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவத்துக்கும், எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் சொன்னநாளில், இடத்தில், நேரத்தில், விதத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றும், அவர்கள் ஒப்புதல்வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும், வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்தவழக்கில் ஆய்வாளர், மகசர், ஒப்புதல்வாக்குமூலம், சாட்சிகளின் வாக்குமூலங்களை கைப்பட எழுதினாரா என்றால் வாக்குமூலம் கணிணியில் தயார்செய்யப்பட்டது. சம்பவஇடத்தில் வைத்து கணிணியில் பதிவுசெய்யப்பட்டது. கணிணியில் பதிவு செய்தவர் பெயரை ஆய்வாளர் விசாணையின் போது சொன்னேனா என்று ஞாபகமில்லை. அருகில் அதை பிரிண்ட் அவுட் எடுத்தோம். ஆய்வளார் விசாணையில் அருகில் பிரிண்ட்அவுட் எடுத்ததாக நான் சொல்லவில்லை என்றால் சரிதான். அருகில் பிரிண்ட்அவுட் எடுத்த கடைபெயரோ, கடைக்காரரர் பெயரையோ ஆய்வாளர் விசாரணையின் போது நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவத்துக்கும், எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. உயர்அதிகாரி புள்ளி விவர கணக்கிற்காக பதிவு செய்த வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>நீதிமன்ற அனுமதியுடன் மறுவிசாரணை:</u>**

முதலில் சம்பவஇடத்தில் இருசக்கர வாகனம் மற்றும் கட்டப்பையில் இருந்த 10 பாட்டில்களை கைப்பற்றும்போது தயார் செய்யப்பட்ட கைப்பற்றுதல் மகசரில் நான் இரண்டவதாக சாட்சி கையெழுத்து செய்தேன். கைப்பற்றிய பாட்டில்களில்

இருந்து பகுப்பாய்வுக்கு அனுப்ப தலா 500மிலி வீதம் 2 பாட்டில்களில் எடுக்கப்பட்டது. நான் கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1,

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

கைப்பற்றுதல் மகசரில் 500மிலி என்பது Over writingஆக உள்ளது என்றால் சரிதான். மகசர் தயார் செய்த இடம் தண்ணீர்பந்தலில் எந்த இடம் என்று குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் சரிதான். காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்த மகசரில் நான் கையெழுத்து செய்துவிட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.